# பரத்தையர் மாலை

பதிப்பு
மு.தேவராஜ்

நெறியாளர்
வீ. அரசு
பேராசிரியர் - தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

ஜூலை - 2005

# பரத்தையர் மாலை

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு
**மு. தேவராஜ்**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர் - தலைவர்

## தமிழ் இலக்கியத்துறை
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005**

**ஜூலை - 2005**

சுவடியியலும் பதிப்பியலும்

பட்டயப் பேற்றிற்காக

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்: DWK5003

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு,**
பேராசிரியர் - தலைவர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'பரத்தையர் மாலை'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **மு. தேவராஜ்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(முனைவர் வீ. அரசு)**

நாள் : 27 -07-05
இடம் : சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**மு. தேவராஜ்,**
முதுகலை முதலாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியிலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'பரத்தையர் மாலை'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

**(மு. தேவ்ராஜ்)**

நாள் : 27-07-2005
இடம் : சென்னை-5.

என் தாத்தா

வே. சின்னப்பையன்

அவர்களுக்கு ...

# உள்ளடக்கம்


பக்கம்

பதிப்புரை i

தமிழ் இலக்கண இலக்கியத்தில் பரத்தையர் ix

சுருக்கக் குறியீட்டு விளக்கம் vii

பரத்தையர் மாலை 1

பின்னிணைப்பு

1. செய்யுள் முதற் குறிப்பகராதி 39
2. அருஞ்சொற்பொருள் 44
3. சுவடியமைப்பு, சுவடி பிரதி 46
4. சுவடி எழுத்து மாற்றம் 47

துணை நூற்பட்டியல்

## பதிப்புரை

பல்வேறு வகையான ஓலைச் சுவடிகளை கண்டுபிடித்து, தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை உலகிற்கு வெளிப்படுத்திய பெருமை தமிழ்ச்சுவடி அறிஞர்களையே சாரும். ஓலைச்சுவடிகளை பெரும்பாலும் சமூகத்தில் உள்ள மடங்கள், கோயில் கருவறைகள், பழமையான நூலகங்களில் வைத்துதான் பாதுகாத்து வந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. ஓலைச்சுவடியில் எழுதி வைக்கப்பட்டுள்ள எழுத்து முறைமைகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாறுபட்டு வந்திருப்பதை சுவடிகளின் மூலம் அறியலாம். சுவடிகள் பெரும்பாலும் இலக்கணம், இலக்கியம், கலை, மருத்துவம், சோதிடம் சார்ந்த பொருளிலேயே அதிக அளவில் உள்ளன.

தமிழ் ஓலைச்சுவடிகளை கண்டுபிடித்தது மட்டுமல்லாது அதனை பதிப்பித்த புலவர் பெருமக்களுள் சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர், ஆறுமுகநாவலர், எஸ். வையாபுரிப்பிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் சிறந்த பல இலக்கியங்களையும் இலக்கணநூல்களையும் பதிப்பித்து தமிழுலகிற்கு பெரும் தொண்டு செய்துள்ளனர்.

சுவடிகளை பாதுகாக்க அந்தந்த காலகட்டத்தில் அரசு சார்ந்த நிறுவனங்களும், அரசு சாராத நிறுவனங்களும் பல வழிகளிலும் செயல்பட்டு வந்தன. இந்த வகையில் சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடியில்

நூலகமும், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகமும் குறிப்பிடத்தக்கது. இவ்விரு நூலகங்களும் ஏராளமான ஓலை மற்றும் தாள் சுவடிகளை இன்றளவும் பாதுகாத்து வருகின்ற பணியை செய்கின்றன. மேலும் கோவை, உலா அந்தாதி, பிள்ளைத் தமிழ், மாலை... என அரிய பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளன. இத்தகைய முயற்சியில் இவ்விரு நிறுவனமுமாக இருநூற்றி எழுபது சிற்றிலக்கிய நூல்களை பதிப்பித்துள்ளன. அவற்றில் முப்பத்தி ஏழு மாலை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்நூல்களில் சில திரிபுராண மாலை, பழனிமாலை, கும்பேச்சார மாலை, மனோண்மணி மாலை போன்றன.

**சுவடி அமைப்பு**

சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடியில் நூலகத்தில் சிற்றிலக்கிய ஓலைச் சுவடிகள் அதிக அளவில் உள்ளன. அச் சுவடிகளில் "பரத்தையர் மாலை" என்னும் சுவடி பிரதிகள் இரண்டுள்ளது. அவற்றின் பதிவு எண்கள் T.R. 1418 (4355 R) என்னும் நூலினை பொய்கை பாக்கு பரசுராமபிள்ளை குமாரன் லங்கையின் கையெழுத்து... என்றும், சுவடி எண் R2586 என்னும் சுவடியினை மதன சிகாமணி ஆசிரியர் இயற்றினார் என்று குறிப்புள்ளது. சுவடிகளில் இருவகையான எழுத்து முறையிலிருப்பதால், அதாவது முதற்சுவடி கூட்டெழுத்து முறையிலும், இரண்டாவது சுவடி தற்கால தமிழ் நடையிலும் எழுதப்பட்டு உள்ளன. சுவடியின் ஒரு சில இடங்களில்

கரையான்களினால் அரித்து சிதிலமடைந்து இருசுவடி பிரதிகளும் உள்ளன.

**ஆசிரியர் குறிப்பு**

பரத்தையர் மாலை சுவடியின் அடிக்குறிப்பு வைத்து T.R. 1418 என்னும் ஓலைச்சுவடியை பொய்கை பாக்கு பரசுராமப்பிள்ளை குமாரன் லங்கையின் கையெழுத்து என்று இருப்பதால் இச்சுவடி இந்நூலின் ஆசிரியர் இவர்தான் என்று ஊகிக்க முடிகின்றது. இவரை பற்றிய தகவலும் கிடைக்கவில்லை.

சுவடி (R 2586) என்னும் பிரதியில் ஆசிரியர் நூறு பாடல்களின் முடிவில் தன்னுடைய பெயரை மகுடமாக வைத்து பாடல் எழுதியுள்ளார். அவை,

"சுகம்போது மென்றுமனத் துயரங் கொண்டு
சோர்மதன சிகாமணி கூற்றாகு மிந்த"

என்ற பாடலை ஆராய்ந்தால் மதனசிகாமணி தான் இந்நூலின் ஆசிரியர் என்று உறுதி செய்யப்படுகிறது. ஆனால் சிற்றிலக்கிய புலவர் அகராதி நூலினைத் தொகுத்த, "சிற்றிலக்கிய புலவர் அகராதி" என்னும் நூலினை எழுதியுள்ள ந.வீ. செயராமன் அவர்கள் மதன சிந்தாமணி பரத்தையர் மாலை நூலின் புலவர் என்று (பக்கம் 218) குறிப்பிட்டுள்ளார். எனவே நூலின் ஆசிரியர் மதன சிகாமணியா, மதன சிந்தாமணியா என்ற ஐயம் உள்ளது. இவ்விரண்டு ஆசிரியர்களும் கி.பி. 20ம் நூற்றாண்டினை சேர்ந்தவர்கள் ஆவர்.

### யாப்பு அமைப்பு

பரத்தையர் மாலை நூலின் இரண்டு பிரதிகளிலும் யாப்பு இலக்கண வரையறை வைத்து பாடல் எழுதப்பட்டுள்ளது. அவை வெண்பா, ஆசிரிய விருத்தம் என்னும் இரண்டு வகை யாப்பு மட்டுமே நூலில் பயின்று வந்துள்ளன. பாடலின் தொடக்கமாக காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவினாலும், ஒரு சில பாடல்களில் எழுசீர் ஆசிரிய விருத்தமும், பெரும்பாலும் எண்சீர் ஆசிரிய விருத்தமே பாடலின் முழுவதும் பயின்று வந்துள்ளது. ஒரு சில பாடல்களில் இலக்கண யாப்பு முறைமைக்கு முரணாகவும் உள்ளன. அந்தப் பாடல்களின் எண்கள் 53, 54, 56 இவற்றின் கடைசி அடியில் இலக்கண மாற்றம் அடைகின்றது. இவ்விரு சுவடிகளிலும் ஒரு சில பாடல்களில் நகரம் னகரமாகவும், ளகரம் ழகரமாகவும், ரகரம் றகரமாகவும், ளகரம் றகரமாகவும், ளகரம் லகரமாகவும் மாற்றம் அடைந்துள்ளன சான்றிற்காக பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### நூலின் உட்கருத்து

பரத்தையர் மாலை நூலுள் ஆசிரியர் பரத்தையரின் இயல்பான குணத்தன்மையும் குலத்தன்மையினையும் கூறி அவர்களிடம் செல்கின்ற ஆண்மகன் எத்தகைய இழிவான நிலைக்கு தள்ளப்படுவான், எத்தகைய நோய், துன்பங்களுக்கு ஆளாகி பொன், பொருளை இழந்து துன்புறுவான் என்ற கருத்தினையும் எழுதியுள்ளார். இந்த நிலைமைக்கு ஆட்படாமல் மறைக்காட்டில் எழுந்தருளி யுள்ள அம்மானை வணங்கினால் புண்ணியம் கிடைக்கும்,

பழிபாவங்கள் நீங்கும் என்ற நாட்டார் வழக்காறுகள் சார்ந்த நிகழ்வுகளை ஆசிரியர் ஓலையில் பதிவு செய்துள்ளார். இதனால் இந்நூல் சிற்றிலக்கிய அறம் சார்ந்த நூல்களில் ஒன்றாகும்.

இந்நூலினை ஆசிரியர் எழுதி எந்த வருடம் முடித்தார் என்பதற்கு அடிக்குறிப்பில் நளவருடம் மாசி மாதம் 13ஆம் தேதி மறைக்காட்டு அம்மானை தெய்வத்தை வணங்கி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் நூலின் மறுபெயராக "மறைக்காட்டுமாலை" என்றும் அழைக்கப்படுகின்றது. பட்டீசுரபச்சநாயகி அம்மான் இருபாகடாச்சத்தி நன்னாளிலே எழுதி முடிக்கப் பட்டுள்ளமையால் இந்நூலில் உள்ள தெய்வம் கோவை மாவட்டத்தை அதாவது கொங்கு மண்டலம் சார்ந்த தெய்வத்தை குறிக்கும் என்றும், இந்த தெய்வம் உள்ள நகரம் சூறை நாட்டுத் திருப்போரூர் என்ற ஊரைச் சார்ந்த சிறு தெய்வம் என்று கூறப்படுகின்றது.[1]

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் முதுகலை சேர்ந்து பயில வாய்ப்பளித்தும், சுவடியில் பட்டய வகுப்பில் சேர்ந்து 'பரத்தையர் மாலை' என்னும் ஓலைச் சுவடியினை பதிப்பிக்க அனுமதியினை வழங்கியும், இந்நூலினை பதிப்பிக்க பல வழிகாட்டுதல்களையும் நல்கிய எனது பேராசிரியரும், நெறியாளருமான **முனைவர் வீ. அரசு** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

---

1. தகவல்: புலவர் பா.வெ. நாகராசன்

சுவடி பட்டய பயிற்சி வகுப்பில் சுவடி பயிற்சி வழங்கிய ஆசிரியர் **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும், சுவடி சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்திய **புலவர் பா.வெ. நாகராசன், முனைவர் ஜெயக்குமார், முனைவர் சு. நிர்மலாதேவி, பேராசிரியர் சீனிவாசன்** ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடியில் நூலகத்திலிருந்து 'பரத்தையர் மாலை' என்னும் ஓலைச்சுவடியினை வழங்கிய நூலகத்தின் காப்பாட்சியர் **முனைவர் சவுந்திரபாண்டியன்** அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறையில் உள்ள சுவடியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு பல்வேறு சூழ்நிலைகளில் துணைநின்று உதவியினை நல்கிய அனைத்து **நண்பர்களுக்கும்**, கணிபொறி மூலம் அழகான முறையில் அச்சிட்டு நூலாக வழங்கிய **டு டே கிராபிக்ஸ்** அச்சகத்தார் **திரு. ஆர். பாபு** அவர்களுக்கும், திருமதி ஆனந்தி, செல்வி கோகிலா, செல்வி அம்சவள்ளி, திரு சீனிவாசன் மற்றும் அச்சகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் வணக்கத்துடன்...

**(மு. தேவராஜ்)**

## சுருக்க குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அ.க. | - | அகப்பொருள் விளக்கம் |
| அகம். | - | அகநானூறு |
| அ.கு.பா. | - | அடிக்குறிப்புப் பாடல் |
| களவி. | - | களவியல் |
| கா. | - | காப்பு |
| குறள். | - | திருக்குறள் |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| சு.எ. | - | சுவடி எண் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| பா.எ. | - | பாடல் எண் |
| பொ. | - | பொருளதிகாரம் |

# தமிழ் இலக்கண இலக்கியங்களில் பரத்தையர்

மனித சமூகம் புவியில் தோன்றி வளர்ந்து அறிவு சார்ந்த புலன்களின் வழியே பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்தி வந்துள்ளன. அப்படி நிகழ்த்தி வந்த சமூகத்தில் அகம், புறம் என்ற திணை சார்ந்த ஒழுக்க முறைகள் மக்களிடம் காணப்பட்டன. இதனை தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களில் புலவர் பெருமக்கள் காலந்தோறும் பதிவு செய்து சென்றுள்ளனர். தொல்காப்பியம் தமிழின் முதல் நூல் என்று இக்காலம்வரை கூறப்படுகின்றது. தொல்காப்பியம் மூன்று அதிகாரம் கொண்டுள்ளது. இவற்றுள் அகம், புறம் சார்ந்த நிகழ்வுகளின் பதிவாக பொருளதிகாரத்தில் நிலம், பொழுது, தலைவன், தலைவி, தோழி, நிகழ்வு உள்ளன. இவற்றில் தலைவிக்கு நிகரான பரத்தையர் பற்றிய நிகழ்வுக் கூற்றுகளைத் தொல்காப்பியர் களவியல் என்னும் இயலில் குறிப்பிட்டுள்ளார். அவை கீழ்வருமாறு,

"தன்வயின் உரிமையும் அவன் உயிற் பரத்தையும்
அன்னவு முளவே யோரிடத் தான"

(தொல்.பொ. கள. 111)

"..............

மாயப் பரத்தை உள்ளிய வழியும்"

(தொல்.பொ.கள. 147)

என்னும் நூற்பாவில் பரத்தையர் என்ற சொல்லாடலையும், அக்கூற்றின் நிகழ்வுகளையும் பதிவு செய்துள்ளார் தொல்காப்பியர்.

தொல்காப்பிய இலக்கண நூலுக்கு பின் வந்த நாற்கவிராச நம்பி இயற்றிய 'அகப்பொருள் விளக்கம்' என்னும் இலக்கண நூலில் பரத்தையர் யார்? பரத்தையர் எத்தகைய தன்மை அடிப்படையில் அவர்கள் பிரிக்கப்பட்டுள்ளார் என்று மிகவும் தெளிவாக குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

"காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவர் உரியர் அவையிரண் டிற்கும்"

(அகம். பொ. விள. 37)

காதற் பரத்தையராவார், சேரிப்பரத்தையர் தம் மகளிராய்க் காதலால் புணர்தற் குரியவராவார், காமக்கிழத்தியராவார், ஒருவனுக்கே உரிமை பூண்டவராய்க் காமத்தின் பொருட்டு வரையப்படுவர், பின்முறை வதுவைப் பொருட்டு வரையப்படுவர் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியாவாள் இரண்டாம் மனைவி என்று பரத்தையர் பிரிவை பற்றி மிக தெளிவாக விளக்கியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களில் தலைவன் தலைவி தோழி போன்ற கதாப்பாத்திரங்கள் உள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைவன், தலைவி தோழிக்கு அடுத்ததாக பரத்தியருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அகப்பாடல்களில் நாடகப் பாத்திரங்களாக, பரத்தையரின் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஐந்திணைகளில் ஒன்றான மருத நிலத்தில் தலைவன், தலைவி பிரிவு ஏற்படுகிறது. தலைவிக்கும் தலைவனுக்கும் இடையில் சண்டை தோன்றுவதற்கு காரணமாக இருப்பவள் பரத்தையர் என்று இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவள் வாழ்கின்ற பகுதியைச் சேரி என்றும், தனியான தெருக்களில் வாழ்ந்ததாக சங்க இலக்கியப் பாடல்களில் குறிப்பு உள்ளது.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவிப் பேச்சு மிகவும் குறைவு. அவள் அதிகம் பேசவும் வாய்ப்பளிக்கவில்லை. அவளுக்காக அதிக அளவு பேசப் படுகின்ற கதாப்பாத்திரம் தோழி. இவள் பேச்சே அதிக அளவில் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. தலைவிக்கும் தோழிக்கும் இருக்கின்ற நட்பு போல பரத்திக்கும் தோழிக்கும் நட்பு கிடையாது. அக்காலத்தில் செல்வர்கள் வாழ்கின்ற நகர்களிலும், ஊர்களிலும், பரத்தையர் குடியிருப்பு இருந்துள்ளன. அக்காலத்தில் வசதி படைத்த தலைவன் தன் மனைவியின் பூப்பின் நாட்களிலும், பிரசவ காலத்திலும் குழந்தைக்குப் பாலூட்டும்

காலத்திலும், சண்டைகள் காரணமாக இரவு நேரத்தில் பரத்தையர் சேரிக்கு தலைவன் சென்று காம லீலைகளை புரிந்துள்ளான் என்பதற்கு இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

தலைவனுக்கு மனைவி இருந்தாலும் அவனுக்கு இன்ப உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள காமக் கிழத்தி என்கின்ற வைப்பாட்டிகள் இருந்துள்ளனர். இத்தகைய நிகழ்வுகளை தமிழ் இலக்கியங்களின் சொல்லாடல்களில் ஈராயிரம் ஆண்டுகளாகப் பேசப்படுகின்றன.

பரத்தை என்ற பாத்திரம் சங்க காலத்தில் 'கொண்டி மகளிர்' எனவும் 'வேசிகள்' எனவும் 'விலைமகள்' எனவும் குறிக்கப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சி என்ற நூலில் கடைத் தெருவில் பரத்தையர் ஆண்களைப் பரத்தமைக்கு அழைக்கும் வியாபாரம் நடந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது. சான்று அகநானூறு என்னும் நூலில் பரத்தி ஒருத்தி தலைவி இடம் கூறுகிறாள்,

"உன் தலைவனை என் கூந்தலில் கட்டியிழுப்பேன்" என்று வஞ்சின மொழியாக பரத்தி கூறுவதாக இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் பரத்தையர் பற்றிய பதிவுகள் உள்ளன. காமத்துப் பாலில் உள்ள குறள்

"பெண்இயலார் எல்லார்க்கும் கண்ணின் பொதுவுண்பார்
நண்ணேன் பரத்தைநின் மார்பு"

(குறள். 1311)

இக் குறளில் பரத்தையிடம் தலைவன் சென்று வந்துள்ளதால் தலைவிக்கும் தலைவனுக்கும் ஊடல் நடப்பதுபோல் கூறியுள்ளார்.

இலக்கணம் சங்க இலக்கியங்களில் மட்டுமல்லாது காப்பியங்களிலும் பரத்தையர் யார், அவர்கள் எத்தகைய பகுதியில் வாழ்ந்தனர், அவர்களின் நடை,உடை, பாவனைகள், ஆபரணங்கள், கலைகள் பற்றிய செய்திகள் நூல்களில் உள்ளன.

காப்பியங்களில் பரத்தையருக்கு கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என்றும், பெண்களுக்கு உரிய நற்குணங்கள் குறிப்பிட்டாலும் இலக்கியம் பரத்தியரைக் குறைவாக மதிப்பிட்டு அவர்களை இழிவாகக் குறிப்பிடுகின்றன. பரத்தையர் பல கலைகள் கற்று அக்காலத்தில் செல்வந்தர் மாளிகைகளில் இருந்துள்ளனர். பரத்தையர் வாழ்கின்ற பகுதிகளில் சாதிப் பிரிவு முறைகள் இருந்ததாக இலக்கியச் செய்திகள் சான்றளிக்கின்றன. குறிப்பாக உயர்குடியில் பிறப்பவளுக்கு உரிய உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்களை, தாசி என்றும், கணிகை என்றும், தாழ்ந்த குலத்தைச் சாந்தவளை வம்பரத்தை என்றும் சேரிப் பரத்தையை வேசி என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பரத்தையர் எத்தகைய உடை, ஆபரணங்கள் அணிந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக, கூந்தல் முதல் பாதம் வரை கணிகையர் குல, பரத்தை விதவிதமான

ஆபரணங்கள் சூடினார்கள் என்றும் கூந்தலுக்கும் காலுக்கும் நீல குதும்பை, கழுத்துக்கு சவுடி சரப்பளி, (முத்தாரம்) விரல்களுக்கு நெளி மோதிரம், கைகளுக்கு சூடகம், சங்குவளை, தோளுக்கு முத்துவளையம், இடுப்புக்கு முப்பத்திரண்டு முத்துக் கோவை என்னும் அணிகலன்களை அணிந்து நடனம் புரிந்துள்ளனர் என்பதற்கு ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் இச்செய்தி கூறியுள்ளது. (சிலம்பு)

காப்பியங்கள் காலத்திற்கு பிறகு அறநெறிகளை வலியுறுத்துவதற்கும், சமய கொள்கைகளைப் பரப்புவதற்கு பக்தி சார்ந்த இலக்கிய நூல்கள் தோன்றின. அந்நூல்களில் அறநெறி, ஒழுக்க நெறிகளை தவறுபவர்கள் நரகத்திற்கு சென்று துன்பம் அடைவர்கள் என்றும், இதனால் ஒழுக்க நெறி தவறாமல் புவியில் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக பக்தி இலக்கியங்களில் பரத்தையர் பற்றி நிகழ்வுகள் உள்ளன.

நீதி நூல்களில் பரத்தையர்கள் பற்றி ஒரு சிலப் பாடல்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை தனிப் பாடல்கள், நீதி நூல் கொத்து என்னும் நூல்களில் அவை பரத்தையர் பற்றிய அடைவு பெயர்களாக வேசி, வேசை, தாசி என்றும் அவ்விலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்விலக்கிய காலங்களுக்கு அடுத்தாக சிற்றிலக்கிய நூல்கள் தோன்றின. அவற்றிலும் அறநெறிகளும், ஒழுக்க

நெறிகளும் போதிப்பதாக பல நூல்கள் உள்ளன. நீண்ட பாரம்பரியம் மிக்க நம் தமிழ்க் கலாச்சாரத்தில் பெண் உடலையும், காம விழைவையும் எழுதுவது இக்காலத்தில் புதியதல்ல. அக்காலத்தில் அகன்ற அல்குல்களையும் விம்பிய பெருத்த முலைகளை பற்றி எழுதாத இலக்கியங்கள் இல்லை எனலாம். இலக்கியங்கள் இக்காலகட்டத்தில் பல நிலையில் திரிபு அடைந்து இன்றைய கவிதைகள், சிறுகதைகள், புனைகதைகளிலும் பெண்களுடைய உடலமைப்பு வர்ணனைகள் பற்றி அதிகளவில் நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. எனவே பரத்தையர் பற்றி செய்திகள் தொல்காப்பிய காலந் தொடங்கி 20ம் நூற்றாண்டில் தோன்றிய அற இலக்கியங்கள் வரை இவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகளை பதிவு செய்து வந்துள்ளது.

*******

ஓம்

ஹரி தேவி சகாயம்

# பரத்தையர் மாலை

## காப்புச் செய்யுள்

சீர் பெறு புவியில் பாடிதேடிய பொருளுக்கே
வாரணி முலையாள் வேசிமையலில் மூழ்கிப்போவோர்
தாரணி தனிலறிந் துதையலார் மையல் நீங்க
கார்முக முகத்தானாக் கணபதி காப்பு தாமே

## நேரிசை வெண்பா

பேதைமுத லேழுபேர்ப் பெண்பரத்தை மார்களிடம்
சூதில் திரிந்து சுழலாமல் – ஆதிபரன்
தந்த மதக்களிறை தப்பாமல் போற்றினால்
வந்த வினையகற்று வார்

i

பொய் சொல்லி வாழும் பொதுமடலார் ஆசைதனை
மெய்யென்று நம்பி மெலியாமல் – செய்ய
திருநீல கண்டர் அருள் செல்வக் கணபதியை
ஒருபோதும் நீமறவா தோது.

ii

## எழுசீர்ஆசிரியவிருத்தம்

சீர்கொண்ட மாணிக்க வல்லிரத் தினவல்லித்
திருவல்லி செம்பு வல்லி
ஏர்கொண்ட சுகவல்லி ராசானா யகிவல்லி
யிசைவான காம வல்லி
பேர்கொண்ட காமுகரைக் கைக்குள்ளா கியவல்லி
பேதையர் மயக்கம் விட்டு
நீர் கொண்ட செஞ்சடிலர் உமைபாகர் திருவடியை
நினைவில் குடிகொள்வர் தாமே

-1

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

பூமாலை மணிமாலை முத்து மாலை
பொன்மாலை பாமாலை புனித மாலை
பாமாலை தணமாலை பரத்தை மாலை
பறிமாலை விடபுருஷர் அணியு மாலை
காமாலை மிகமாலைக் கருது மாலை
காமுகரைப் பணம்பறிக்க கத்த மாலை
மாமாலை வேசியரை மறந்து நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்குவீரே

2

கைப்பொரு ளெல்லாமழி யுடம்பு கீணங்
　　கண்களித்தாற் றமுறைத்து கண்ட போதுஞ்
செப்பறிய நகைக்கிடமாம் பாவஞ் செரு
　　தொழிலுக்கிசை கெடுசேனா கோபம்
இப்படியே பரத்தையர் தம்மின் படுமல்லா
　　இமைப்போது மலருடனே யிணங்க லாகா
மையப்பரவுங்கண் டந்தான் எம்பி ரானார்
　　மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

3

தேளுக்கு விஷங்கொடுக் கிறவட் டமான
　　திருக்கை மீன் றனகதுவிஷந் திரண் டமுன்
வாலான ழகதுவிஷங் கடிகை மூன்றே
　　முக்கால்நற் பாம்புதன்விஷ மான பல்லு
வெளுகது விஷம்புவிப் பாண ழாதும்
　　வேசியற் கெண்சாணு டம்பும் விஷமே கண்டாய்
வாளுகது நிகர்விழியாள் பாகத் தானே
　　மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

4

பாம்புக்கு பால்வாத்து வளர்த்த போதும்
　　பாவிகள் தனதுவிஷம் பத்தா றாது
வேம்புக்கு தேன்வாத்து வளர்த்த போதும்
　　மேன்மேலுந் தன்கசப்பு மேல்விட் டோங்கும்
தீம்புத்த பரத்தையற்குக் கோடி செம்பொன்
　　செய்தாலும் அவர்குணத்தை திருப்ப லாமோ
வாம்பாதத் தில்யேறிவரு எம்பி ரானை
　　மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

5

கடங்காரர் எண்பதுபொன் கொடுக்க வேணும்
கைமாத் தாய்அஞ்சு பணங் கொடுக்க வேணும்
கொடங்கா னுஞ்சாரா யமளந்து வாங்கிக்
குடித்தபணம் பதினஞ்சு கொடுக்க வேணும்
மிடங்காணங் கொடுக்க வென்றால் விதற்கு
கனசெய்வோம் மென்றுதேடி மெல்ல மெல்ல
இதமாய் வாங்கும் மடங்காத பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
6

ஒருபொழுதும் பிரிந்திருக்க மாட்டோ மிப்போ
ஒருநாளாள் விட்டேப்படிநீர் யிருக்க போனீர்
இருவருந்தான் மேனத்திண்ணுங் கூடி னோமோ
எத்தனைகா லங்கூடி வாழ்ந்தி ருந்தோம்
பருவமது கிடைக்குமோ பாரீ ரென்பார்
பசப்புவார் பணம்பறிப்பார் பரத்தை மாரை
மருவுவதுஞ் சருவ்வுவதும் வேண்டா மெங்கள்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
7

எத்தினிநாள் பிரிந்திருப்பே னுள்வா யோலை
எழுதியவர்க் காட்டி நீ ரென்ன மோகம்
சத்தனையா னாலுமனங் களவு காணேன்
கியாமலிருக் கீறிர்பேய்க் கொண்டார் போல
யித்தனைகா லமுமில்லை எங்கே கத்தீர்
யென்றுதேடி மெல்லமெல்ல யிதமாய் வாங்கும்
மத்தனைமா மழுவெந்தும் எம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
8

தாய்சவிக்க வேசியர்க்குக் கொடுத்து கெட்ட
சாயகுடியோ சனைக்கிழவி சற்றே கண்டால்
ஏசலுக்கு வந்தீரோ ஒருகா சுக்கு
மிடமில்லா வெறுமூடரிங் கேன்வந் தீரோ
பூசலுக்கு வந்தீரோ மதிகெட் டீரோ
போக்கிடம் வேரில்லையோ போம்போ மென்று
வாசலுக்கு வரவோட்டா ரவரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
9

பெண்டாட்டி பகையாவாள் தகப்ப னாரும்
பெற்றவளும் வாய்திறந்து பேச மாட்டார்
கொண்டாட்ட மாயிருந்த தமையன் தம்பி
கோவிப் பாரன்னியறங் கூடச் சொல்வார்
திண்டாட்ட மாமுரவின் முறையா ரெல்லாஞ்
சீயென்பார் நாய்யென்பார் திருட னென்பார்
வண்டாட்ட முள்ளபரத் தையரை விட்டு
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
10

வீரவாளிப் பட்டுப் பொன்மைப்பட்டு
வெண்பட்டு செம்பட்டு வீதிப்பட்டு
சாரிமேகப் பட்டுமாடை வண்ணத்தலையெ ழுத்து
நிரையெழுத்துமுச் சந்திர காவி
சே றுமி ள மாதுளம்பூ வன்னமென்னுஞ்
சேலைகொடுத் தாலுமென்ன செய்தீ ரென்பார்
வாறுநீப ரத்தையரை விட்டுநீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
11

கருதரிய கனியிருக்கச் சிருகாய் தேடிக்
கையிலே கரும்பிருக்க வேம்பு தேடித்
தெரியவிளக் கிருக்க மினி மினியைத் தேடித்
தேனிருக்கச் சாராயந் தேடு வார்போல்
பரிவுடைய மனையாட்டி யிருக்க மாயப்
பரத்தையரைத் தேடிநொந்து பணமுந் தோற்று
மருவுபெரும் பாவிகளாய்ப் போக வேண்டாம்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

12

தெள்ளமுத மிருக்கவிஷந் தேடி வாழை
செய்யகனி யிருக்கக்காஞ் சிரங்காய் தேடி
வெற்றிலைபாக் கிருக்கத்தம் பலம்போய்த் தேடி
மெல்லியபொற் கலையிருக்கக் கந்தை தேடி
உள்ளதிரு மாதுபோல அழகும் கற்பும்
உள்ளமனை யாளிருக்கப் பரத்தை மார்க்கு
மல்லிகைப் பொருள்கொடுத்து வருந்த வேண்டா
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

13

காட்டுக்கே யெரித்த நிலா பெருகு மாற்றிற்
கரைத்தபுளி கமாவெடிப்பி றகவிளத்த பாலபாழ்
வீட்டுக்கே யிடும்விளக்கு வெள்ள மாக
விழலுக்கே யிரைத்ததண்ணீர் வேம்புக் கேதான்
சேட்டுக்கே சொரிபசுந்தேள் பரத்தை மாற்குச்
செய்தநன்றி யிவ்வாறுஞ் செப்ப லாகும்
மாட்டுக்கே யெறிவருமே எம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

14

முன்னொருவன் வாயிற்றம்ப லத்தை வாங்கி
முகியாமற் றங்களிட வாயிற் கொண்டு
பின்னொருவன் வந்தவுடன் வனவாய் தன்னில்
பேதமுறவு மிழந்துநலம் பேசிப் பின்னுந்
தன்னினங்கள் கேட்டவக்கு மிந்த சேதி
தராத பரத்தையரைத் தழுவ லாமோ
மன்னுகின்ற நஞ்சுரையுங் கண்டத் தானா
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

15

நெருப்பிலே குளிர்ந்தகுணங் காண லாகும்
நீர்ப்பெருக்கி நீந்தாம நிற்க லாகும்
பொருப்பிலே செழிந்தயிளம் வடிக்க லாகும்
பொருந்தாத விஷங்கடணைப் பொருத்த லாமோ
கருப்புவாய் மதுரமொழிப் பரத்தை மார்தங்
கபடத்தை யெவராலுங் கடக்க லாமோ
மருப்புருவா ரண்முரித்து நின்ற தேவை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

16

கூத்தியர்கள் கபடத்தை யரிய வென்றால்
கொஞ்சமல்ல தங்களுக்கு கூடா தென்றே
நீத்தசிவன் மழுவெடுத்தான் திருமால் பாண்டு
நெய்யிலே கையிட்டா நிறைந்த வேதான்
ஒத்தரிய சத்தியத்தே சத்தே சேர்ந்தான்
எப்படிநீ ரிளைஞோரா யிலரைச் சேர்ந்தீர்
வாய்த்தனி வேசியரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

17

தெருவிலேபு றப்படுவாள் முலையைச் சற்றே
திறப்பாள்மெத் தெனநடப்பார் திரும்பி பார்ப்பார்
உருவிலேயி ளைஞோரைப் பார்பா ராசை
உள்ளவர்போல் மயங்குவாரு டன்மேல் வீழ்ந்து
சருவுவாரழைத் துக்கொண்டு உள்ளே போவார்
தாம்பொருந்தும் பணவிலைக்குத் தக்க தாக
மருவுவார் பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
18

பிணங்கண்டால் கழுஓடிச் சுற்றி கொள்ளும்
பிணிகண்டால் வயித்தியனார் பேசு மங்கே
நிணங்கண்டாற் காகநாய்பி டிங்கித் தின்னும்
நீர்கண்டான்முதலைவந்துநெருங்கிக்கொள்ளும்
பணங்கண்டால் விலைமாத ராசை நெஞ்சம்
பாவிப்பா ரவரைமுகம் பார்க்க லாமோ
மணங்கண்டால் மதுவருந்தும் வண்டு போல
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
19

காலுக்குக் காலாழி யெங்கே கைக்குக்
கடகமெங்கே சவுளியெங்கே கடுக்க னெங்கே
பாலுக்குப் பசுவெங்கே யெருமை யெங்கே
பண்ணைக்கு மாடெங்கே பவள மெங்கே
மேலுக்கு மஞ்சளெங்கே யென்று தட்டி
மெல்ல மெல்லப் பரிக்குமந்த வேசி மாரை
மாலுக்குத் துணையென்று நம்ப வேண்டா
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
20

வேசியர்க்கு நெஞ்சிரக்கஞ் சற்று மில்லை
வேசியர்க்குச் சாதிகுலந் தானு மில்லை
வேசியர்க்குச் செய்தநன்றி யறிவ தில்லை
வேசியர்க்குப்பொய்யல்லானமெய்யொன்றில்லை
வேசியர்க்கு நிரைபொறுமை நாண மில்லை
வேசியர்க்கு விதரணமோ மிகுதி யில்லை
வேசியர்க்குப் பணங்கொடுத்து விரும்ப வேண்டாம்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

21

ஆடிக்குச் சேலையைந்து வாங்க வேண்டும்
ஆடுபன்றி கோழிகரு வாடு வேண்டும்
வேடிக்கை மூக்குத்திச் சவுளி வேண்டும்
மீன்காடை கவுதாரி நாரை வேண்டும்
சாடிக்குச் சாராயம் நிரைக்க வேண்டுந்
தாருமென்று பணம்பறிக்கும் சமாத்தி யான
வாடிக்கைத் தாய்க்கிழவி மயலை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

22

வேண்டியபொன் முன்கொடுத்துத் திரிந்த பேர்கள்
மிடிவந்தா ரெங்களிட வீட்டின் வாசல்
ஆண்டியென வுருமாறித் தனிவந் தாலும்
அதுகேற்ற பேர்களைக்கொண் டடித்துத் தள்ளித்
தீண்டுகீனும் பாவமென வுரைப்பார் வேசித்
தெருவையாக டெரிவினிலுஞ் செல்ல லாமோ
மாண்டவோரு மாபெலிக்கே யுலக மீந்த
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

23

இந்திரனே யானாலுங் கொடுப்ப தொன்று
இல்லையென்றா லவரைவெறுத் தீன் ரென்பார்
கொந்துலகில் புலையர்தா மேவரென் றாலுங்
கொடுப்பவரே தங்கள்குல தெய்வ மென்பார்
சுந்தரமாய்க் கையிலுள்ள பொருளை யெல்லாஞ்
சுத்தவட்டை போலிருந்து சுற்றிக் கொள்வார்
மந்திரமுந் தந்திரமும் மருந்து மான
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

24

வீட்டிலே வலியவந்து நயங்கள் பேசி
விழிகாட்டி முலைகாட்டி விகாரம் பூட்டி
கோட்டிலே சிறந்தமாப் பாவை போலக்
குதித்துநிதி யுள்ளதெல்லாங் கொள்ளை கொண்டு
நாட்டிலே பொய்பிழையு மென்று சொல்லி
நழுவிப்பொம் பரத்தையரை நம்ப வேண்டாம்
மாட்டிலே யேறிவரு மெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

25

நாடிவரு மிரவலர்க்கு மொன்றுஞ் செய்யார்
நல்லோர்க்கு மொருகாசு நல்க மாட்டான்
பாடுபடுந் தாயாற்குந் தகப்ப னாற்கும்
பணமென்றுங் கொடுத்தரியான பரத்தை மாற்குத்
தேடிவரும் பிள்ளைகளாய்த் திரிவரா பின்னுந்
திருந்து திரிந்தென்ன பலன்சேர்க்க கண்டீர்
வாடியிடும் பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

26

பாவிகளைக் கொடுமையினால் பரத்தை மாற்குப்
பலகாலுங் கொடுத்தழிக்கும் பணத்தை யெல்லாங்
கோவிலுக்குக் கொடுத்தாலும் மயலனே யுண்டு
குருக்களுக்கு கொடுத்தாலுங் குறையா வாழ்வு
நாவலர்க்குக் கொடுத்தாலும் கீற்தி யுண்டு
நல்லோற்குக் கொடுத்தாலும் புகழே யுண்டு
மாவிரக பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

27

மூக்கிலே பித்தளைமூக் குத்தி கண்டீர்
முலையிலே பலபெருங் கிள்ளக் கண்டீர்
பாக்கிலே கலந்த பாஷாணங் கண்டீர்
பாவிலே பலபெரும் படுக்க கண்டீர்
நாக்கிலே சாராயந் நாற்றங் கண்டீர்
நாளிலே பணம்பறிக்கும் நாய்ப்புங் கண்டீர்
வாக்கிலே பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

28

ஒருத்தியெனக் கெதிரான வீட்டுக் காரி
ஒருமரத்தைக் கெழுபதுபொன் னுடைமை நூறும்
பருத்தாலுந் தில்தவன்ன சேலை பத்தும்
படிநூற்றுக் களநெல்லும் பற்றி நாள்கண்
திருத்தியதி லேபாதிமாத மாதம்
சிக்காமற் றாருமென்று தெட்டி வாங்கி
வறுத்துகின்ற பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

29

எட்டியிலேகட் டுமரம்பழமுண் டாமோ குல
கிளையிலே யினியபலாச் சுளையுண் டாமோ
நெட்டியிலே நற்கருப்பஞ் சாறுண் டாமோ
நெருப்பிலேகு ளிர்ந்தபணி நீருண் டாமோ
கெட்டியிலே செங்கழுநீர்ப் பூவுண் டாமோ
கோதையர்க ளிடத்தி நல்ல குணமுண் டாமோ
மட்டழகுப் பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

30

முலைகாட்டி முலையில் வைத் தகுறியுங் காட்டி
முகங்காட்டி விலக்கியபல முழுதுங் காட்டி
கொலைகாட்டு நெடுங்கடைக்கண் சற்றே காட்டிக்
கொஞ்சுகிளி மொழிகாட்டிக் கூறு மல்குல்
விலைகாட்டத் தெருத்தோறுந் திரியு மந்த
வேசியரைக் கூடமனம் விரும்ப லாமோ
மலைகாட்டு முலைபரத்தை மாரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

T. 7052

31

சேலையென்பார் பணமென்பார் சிந்தாக் கென்பார்
திருநாளில் சில வெல் லாஞ்செய் யுமோ
ஓலையென்பார் பறித்துக்கொண் டுள்ளோ போவார்
ஓங்கியதாய்க் கிழவிசற்றேமுட் டாளும்
பாலையும் நீ ரையும்பிரிக் குமன்னம் போலப்
பகுத்துண்ணும் பரத்தையரைப் பரவ லாமோ
மாலையனும் போற்றுகின்ற கண்டத் தானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

32

ஒருவனைஉன் மடியின்மீ திலுறங்க பண்ணி
ஒருவனுக்குச் செங்கனி வாயூர நோக்கி
ஒருவனையாம் பாலிருத்தி யுறவு பேசி
ஒருவனுக்கு முலைகாட்டி மயலைப் பூட்டி
வருமிளைஞேர் ஆயிரம்பே ரொருகா லத்தில்
வந்தாலு மாயமிடும் பரத்தை மாரை
மருவுசுகப் போகத்தை மறந்து நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
33

சிலபேரை மெத்தையினமே லிருத்திக் கொண்டு
சிலபேரை முற்றத்தே செல்ல விட்டு
சிலபேரை தெருவாசற் புறம்பே விட்டுச்
சிலபேரைத் தெருத்தோறும் திரிய விட்டு
மலிவாசற் காரர்தம் மைக்காய்ச் சலோடு
வாசலிலே கிடந்துழ லவருத் திமாய்
வலைவீசும் வேசியரை மறந்து நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
34

ஊர்க்குநீர்போன நாள்முதலா வேரிங் கொரு
ருவருடன் பேச்சுமில்லை யுறக்க மில்லை
ஆர்க்குநானிதை யுரைப்பேன் பெற்ற தாயும்
அடுத்தவரும் பகையாக வராசை கொண்டேன்
தீர்க்கும் மருந்த றியீரோவென்று
பிதட்டுவார் பணம்பறிப்பார் திருட்டு வேசி
மார்க்குநீ மனமுருகி மயங்க வேண்டாம்
மாறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
35

பரத்தைய ரோடிணங்கிற் றபாவ மெலாம்
பரலோகங் கிடையாது பணமும் பாளாம்
இறப்பதிலுங் கடையர்வா கிரந்தி சூலை
இளவயதிலே பிடிக்கு மிரும லுண்டாம்
உரத்திடும்பா சாணாத்தால் கழுவ நெய்யால்
உப்பிருந்த பாண்டாம்போ லுழுத்து போகும்
மரத்தியென்னும் பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
36

மாமியார் பிடித்தவரைத் தெருவி லோட்டும்
மாமியா ருள்ளவரை யுள்ளே வைக்கும்
மாமியார் கொடுப்பவரைக் குருவா காணும்
மாமியார் கொடாதவரைப் புலி போல பாயும்
மாமியா ரென்னேரம் மலட்டிக் கொள்ளும்
மாமியார்ப் பரத்தையற்குத் தாயா ரான
மாமியார் மாயவலைக் குள்ளாகாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
37

பச்சைப்பாம் புலர்த்தியதின் சமனோ டொக்கப்
பசுமஞ்சள் கமுகிருந்த பச்சை யோந்தி
எச்சத்தை வாங்கிநன்றா யுலர்த்திக் கொண்டே
இவையெல்லாம் பொடிபண்ணி யெடுத்துக்
கொண்டு
கச்சபூண் முலைதனிலே கீழ்மேற் பூசிக்
கனமெல்லாந் தங்களிட கைக்குள்ளாக
வைச்சுப் போ மெனும்பரத்தை மாரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
38

நாய்த்தலையின் மூளைகுழிநரிப் பிச்சுச் செந்நாய்
பாலுங்கு ரங்கீர னாலுங் கூட்டி
தோய்த்தகழுதைப் பாலுரைத்துச் சங்கின சுண்ணாம்பு
பினிற்கலந்தே யுண்டை சேர்த்துக்
காய்ந்தநருஞ்சாதிக்கா யெலாம் பச்சைக்
கற்பூரபொடி யின்பணங்கட்டி வைத்து
வாய்த்தமருந் திடும்பரத்தை மாரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

39

நாய்கடுகு சிறுபுனை சிவநார் வேம்பு
நல்லெண்ணெய்விளக்கெண்ணெய்நாவற்பட்டை
பேய்க்கழுதை முதுகினி ணங்களுவன் காலின்
பெருவிரவின கஞ்சத்த பிணத்தி னூற்றை
தாய்க்கிழவி செவிக்குரும்பி யவைக ளெல்லாம்
சங்கிநிடச் சுண்ணாம்பு தண்ணீற் கூட்டா
வாய்மருந்தி டும்பரத்தை மாரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

40

பாய்க்கிழவி மெனக்கிடக்கும் பரத்தை மாற்குப்
பணம்பறிக்கும் புத்திசொல்லும் பாவி யான
தாய்க்கிழவி பொய்யெல்லா மெய்ய தாகச்
சாதிக்குங் கிழவிமயல் தானுண் டாக்கும்
பேய்க்கிழவி மூதேவி வடிவ மான
பிணங்கிழவி நாய்போலப் பிடிங்கித் தின்னும்
வாய்க்கிழவி மாயவலைக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்குவீரே

41

கடைக்கிழவி தன்வீட்டில் வந்த பேரைக்
கடையர்க்குங் கிழவிமூட்டி கழுதை போல
நடைக்கிழவி மாயமா யற்கிழவி பொல்லா
நரைக்கிழவி ளைஞர்க்கு எமன்போல் வந்த
கிடைக்கிழவி தான்கற்ற வினையால் வெந்து
கெடுங்கிழவி பரத்தையர்க்கு தாயாரான
மடைக்கிழவி மாயவலைக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
42

கொலைக்கிழவி மருந்தாலு மிளைஞோர் தங்கள்
குடிகெடுக்குங் கிழவி நரைக் கோல மான
தலைக்கிழவி பேராசைக் கிழவி நல்ல
சாராயந் தனக்குமகள் தன்னை விற்கும்
புலைக்கிழவி குணங்கெட்ட கிழவி மண்ணாய்ப்
போங்கிழவி பரத்தையர் தாய்க்கி ழவிமாய்
வலைக்கிழவி மாயமற்கு ள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
43

சினக்கிழவி கண்கெட்ட கிழவி யேசும்
திடக்கிழவி யிளைஞோரைக் திருட ராக்கும்
வினக்கிழவி பாசாங்குக் கிழவி மெத்த
வினைக்கிழவி பழக்கிழவி வீம்பு பேசும்
கனக்கிழவி கொடுங்கிழவி பணத்தை யெல்லாம்
கைப்பற்றுங் கிழவிவிலை மாதர் தங்கள்
மனைக்கிழவி தோதகத்துக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
44

பாவலர்க்கே கொடுத்தறியார் வேத மோதும்
பார்ப்பார்க்கு கொடுத்தறியார் பாங்காய் நின்ற
நாவலர்க்குங் கொடுத்தறியார் இரவ லர்க்கும்
நல்லோர்க்குங் கொடுத்தறியார் நலஞ்சேர் கோயில்
தேவர்க்குங் கொடுத்தறியார் தெருவை மார்க்குத்
தேடியளித்தி டுவரந்தச் சேதி விட்டே
மாவலரி பலபூவஞ் சூடு கின்ற
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

45

குரங்கா சணத்தை யொக்கு நிதம்பத் தார்கள்
கோட்டாலைக் காரியர்கள் கொடுத்த போக்கும்
ஓரங்காத நெஞ்சியர்கள் பிடிக்க வாயார்
எவரிடத்து மாசைசற்று மில்லா தார்கள்
பரங்காணு மென்றவரைக் கெடுக்கும் பாவப்
பரத்தையாகி டகிரங்காமற் பலரும் போற்றும்
வரங்காணு மாதமையாள் பாகத் தானை
மறைக்காட்டி லம்மானை வணங்குவீரே

46

நாய்பிடுங்கு முலையை நல்ல கிரிபோ லென்றும்
நரிபிடுங்கு மிடைசிங்க விடைபோ லென்றும்
சீய்பிடிக்கு மூக்கைச்செண் பகம் போலென்றும்
சிதைப்புண்ணுஞ் செம்மயிர்க்கா ரமேக மென்றும்
பீமிதிக்குங் காலையத்திக் கனிபோ லென்றும்
பித்தேரி யிப்படியே பிதற்றிக் கொண்டு
மாய்ந்துதிரிந் தேனுறுகின்ற கீடா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

47

அரைப்பணத்தை காட்டிமுழுப் பணத்தை வாங்கி
அணியாயம் பண்ணுகின்ற வரிவை மார்கள்
கரைப்படைய சொற்குள்வாய்க் கண்டுங் கேட்டுக்
கையிலுள்ள பொருள்களெல்லாங் கழிந்த பின்னர்
குறைப்புடனே பலநோய்கொண் டிளமை தன்னில்
யீடழிந்து திரிந்துவரும் வீதி நீங்கி
வரைப்பரவி லாசகிரி மேவு கின்ற
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
48

வேசியுட னேதிரிந்து! வீணாள் போக்கும்
வீம்பர்கடம் வினையத்தர் நம்டனார் தூதர்
வீசியிழுத் தேயிறுக்க கட்டிக் கொண்டு
வெய்யவழண மார்க்கத்தே மெல்லச் சென்ற
கூசிகள்கண் ணாத்தண்டி லுறுவ வேற்றி
உழலவிப்பாரர் கையினாலே ழித்து நீங்கி
மாசிலாத வெள்ளிவிடை தண்ணி லேறும்
மறைக்காட்டி லம்மானை வணங்குவீரே
49

நரம்புடனே யெலும்புதிரந் தோலுங் கூடி
நான்முளத் தேயொன்பது பீற்றலு மேயான்
குரம்பைமட வார்களோறு பீற்ற லுக்கே
கொடுத்துவெகு சொர்னமெல்லாங் குடிதான் கெட்டு
நிரம்புமதி கெட்டவரே யினியென் றாலும்
நேசமுடன் பரகுறவன் தன்னைப் போற்றி
வரம்புநெறி தனிநடந்து விடைமீ தேறும்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
50

ஆசையென் றாலுன்மீதிற் கொண்டே ரென்பாள்
அழகான பொண் ணல்லோ நானு மென்பாள்
நேசமுட நிணக்கமாய் நயங்கள் பேசி
நீர்வந்தா னான்செய்த தவமா என்பாள்
காசுபணந் தரவேண்டாம் வாரு மென்பாள்
கைக்குள்ளாகப் பட்டபின்பு மறித்துப் பொல்லா
வாசகமுஞ் சொல்லுவாள் வலை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
51

அங்காடிச் சுரைக்காய்போல் முலையி னார்கள்
அனைவருங்கொப் பழுத்துமிளும் படிக வாயார்
சங்காகும் வெண்மையென் வடித்துத் தூசைத்
தப்புகின்ற அல்குபா னரபோ வார்கள்
அங்காலு மோரிடத்து மாசை யில்லா
அறிவைபொது மாதர்கட்ஞ் சுகத்தை நீங்கி
மங்காத வெள்ளைவிடை தன்னி லேறும்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
52

பணந்தானே குணங்கல்வி பரத்தை மார்க்குப்
பணந்தானே யழகிளமை பரத்தை மார்க்கு
பணந்தானே குணமுழுதும் பரத்தை மார்க்குப்
பணந்தானே சுகபோகம் பரத்தை மார்க்குப்
பணந்தானே யலங்காரம் பரத்தை மார்க்கு
பணந்தானே பஞ்சுமெத்தை பரத்தை மார்க்கு
பணந்தானே கொடுத்தணைந்தால் பாவம்போகப்பயின்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
53

பரத்தையரே அறியாமற் பரிக்கும் வேடர்
பரத்தையரே குடிகெடுக்கும் பகைவ ராவார்
பரத்தையரே தழுவணையிற் பங்கங் கொள்வார்
பரத்தையரே பாக்கொடு பாசாண் மீவார்
பரத்தையரே பஞ்சபா தகமுஞ் செய்வார்
பரத்தையரே புறம்பேசும் பழியும் பாரார்
பரத்தையரோடி ணக்கமுற்ற பாவம் போகப்பயின்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
54

பாராய மாயமஞ்சள் வாடை பூசிப்
பலநாளும் பொய்சொல்லிப் பணத்தை யெல்லாம்
சாராயந் தனக்குவிலை யாக நல்கிச்
சாலவுந்தான் கொடுத்தவாய்த் தயங்கி வாங்கிப்
பேராசை யுடன் குடித்து வீதி தோறும்
பித்தடைந்து திரிபரத்தை போகத் தின்பம்
வாராத்துன் பம்வரும் வலை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
55

பணத்தினால் வசமாக்கப் படுவ தெல்லா
பாவமொ ருவடிவான பரத்தை மாரைக்
திணத்தினால் வசமாக்கப் படுமோ நல்ல
குலத்தினால் வசமாக்கப் படுமோ மாந்தர்
நினைப்பினால் வசமாக்கப் படுமோ சற்றும்
நேசத்தால் வசமாக்கப் படுமோ வுத்திப்
பணத்தினால் வரபோகமோ மோகம் நீங்கி பயின்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
56

பரத்தையர் தங்கபடறிந்து தம்மைத் தாமே
பறிகரிக்க வேண்டுமென்ற பரிவா லன்றே
கரத்தின்மழு வுடைய பிறன்கவுரி தன்னை
கருதியொரு பாலமைத் தானகரிய மாயன்
சிரத்தையுடன் மலர்மகளை மார்பிற் சேர்த்தான்
தேவிதனை நாவில்யன் சேர்த்து வாழ்ந்தான்
வரத்தில்வர் மாயவலைக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை பணங்கு வீரே

57

நழுவுவாரென் றிருந்துபண முள்ள போக்கு
நயம்பேசி யிதம்பேசி நன்மை பேசித்
தொழுவார் கள்ளுவார் களோப் பதாகத்
தூதுவிடுவார் கணமெத்த தோழி மாரை
விழுவார்க ளுடன்மீதிற் கிணங்கி சற்றும்
வேண்டியப் பொ ருள்பறித்து விட்டு மெல்ல
விழுவுமந்த பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட் டிலம்மானை வணங்கு வீரே

58

நினைவதெல்லாங் குடிகெடுக்கு நினைவே பார்த்து
நிற்பதெல்லா மயல்பூட்டு நெஞ்சந் தானே
புனைவதெல்லா முலைமீதிற் கிளியுங் கிள்ளும்
புகழ்வதெல்லாம் வஞ்சகமும் பொய்யஞ் சூதும்
நனைவதெல்லாம் பொய்யழுகைக் கண்ணீர் தன்னி
நடப்பதெல்லாம் பணம்பறிக்கு நயமே கண்டர்
அணிவதெல்லாம் பித்தளையே அவரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

59

நானிருக்க நீற்புறம்பே போக லாமோ
ஞாயமோ வும்மையொத் தநாக ரீகம்
தானிருக்க நாம்புறம்பு போகலாமோ
தருமமோ வெலியச் சருவிக் கூடின்
ஊனிருக்க வுயிர்வாங்கும் வேசி மாரை
உறவேண்டுமோ ஒருநாளு நம்ப வேண்டாம்
மானிருக்க கையாளை யெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

60

மாமியார் பரத்தையர்க் குத்தா யாரான
மாமியார் நரைத்ததெல்லா மலச்சை கெட்ட
மாமியார் முகமினுக்கி மஞ்சள் பூசி
மாமியா ரெண்ணெய்க்கு ணமயிர் போல் வாங்கு
மாமியார் புலையருக் மகளைக் கூட்டும்
மாமியா ராசைக்கு மருந்து கூட்டும்
மாமியார் மாயவலைக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

61

படியென்பார் படியளந்து கொடுத்தான மாதப்
பணமென்பார் பணமுழுதுங் கொடுத்தாற் பொன்னின்
கோடியென்பார் கோடிபண்ணி கொடுத் தானல்ல
கோபமென்பார் கொப்பிரண்டுங் கொடுத்தார்காந்த
பொடியென்பார் இப்படியே சூரை கொண்டு
போதுமென்மு வருநாளும் புகலார் கண்டீர்
மடியென்பார் பரத்தையரை விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

62

செய்யாதவஞ் சனைகள் செய்வார் தம்மை
சேர்ந்தவகைப்பொருளை யெல்லாஞ்சேர கொள்வார்
பொய்யாணை யிடச்சற்றுங் கூசார் வேண்டும்
பொருள்கொடுத்தாற் புலையரோடு போகஞ்
செய்வார்
கையாசை யன்றிலே ராசை கொள்வார்
கண்ணாலும் பரத்தையரைக் காண லாமோ
மையர்மச் சுருளோதி பாகத் தானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
63

மாமியார் படிப்பதெல்லாம் புழுதி மாயம்
மாமியார் குடிப்பதெல்லாம் வடிசா ராயம்
மாமியார் நினைப்பதெல்லாங் கப்படும் சூதும்
மாமியார் சொல்வதெல்லா மாய வார்த்தை
மாமியார் கெடுப்பதெல்லா மிளைஞேர் தம்மை
மாமியார் வேசியர்க்குத் தாயா ரான
மாமியார் சோதகத்துக் குள்ளா காமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
64

நிலத்திலே யேரிபாலை நிலமே துன்பம்
நினைத்திலே விலைமாதர் ரிணமே துன்பம்
சலத்திலே யுடபுரைக்குஞ் சலமே கன்பம்
தெருவிலே யெட்டியெனுந் தருவே துன்பம்
குலத்திலே பரத்தையர் தங் குலமே துன்பம்
கூறினேன் பரத்தையர்தம் கொள்கை நீங்கி
வலத்திலே மழுவுடைய யெம்பிரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
65

படும்பட்டார் முலைமாதர் குலஉ யர்ந்து
படுகுழியில் விழுந்தலைந்து பணமுந் தோறும்
கடன்பட்டு மனைமாடு கன்று விற்று
களம்விற்று நிலம்விற்று காணி விற்று
திடம்பட்ட சிறுபயல்க டமையும் விற்றுத்
திருடராய்க் கன்னமிட்டுத் திரிய வேண்டாம்
மடம்பட்ட விலைமாதர் மயல நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

66

கானலே நீ ரென்று கருத லாமோ
கடற்கிளிஞ்சில் வெள்ளியென்று காண லாமோ
மீனெல்லா மதியென்று விளம்ப லாமோ
மினிமினிய விளக்கென்று மெலிய லாமோ
ஊனெல்லா மிருக்கவுயிர் வாங்கும் வேசி
உறவென்ன லோறுநாளும் நம்ப வேண்டாம்
வானெல்லா நிறைந்திருக்கு மெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

67

ஆகமங்களிலிருக்கவெய் தினமேற் சற்றும்
அரைக்கண் மெய்ஞ்சாலு மனதில்லாமல்
பாகவடி வுருவான பரத்தை மாரைப்
பலகாலு நம்புகின்ற பாவி களோ
நாகவிஷமந் திரத்தாற்றி ரும்பும் வேசி
நாய்மருந்து விஷம்பட்டா லேவரக் கூடு
வாகனமா யேறுதெரு மெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

68

எலியோடிப் பொறிவிரை யெடுக்கு மாபோல்
ஈசனின்மே விவலையி லேய்து மாபோல்
புலியோடிக் கற்கூண்டிற் புகுது மாபோல்
புனலோடி மீன் றூண்டில் பிடிக்கும் போல
சலியாமற் பொய்பேசும் பரத்தை மாரைத்
தழுவியே பலநாளுஞ் சளிநோய் கொண்டு
வலி யெடுத்து நோய்குத்துத் திரிய வேண்டாம்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

69

பாக்கிலே மருந்தையிடும் பரத்தை மாரைப்
பலகாலுஞ் சேர்ந்திருந்து பணமும் தோற்று
மூக்கிலே யிடிவிழுந்து குணகு ணென்று
முழங்காலிற் குலைவந்து முடவ னாகி
நாக்கிலே மருந்தூ ரிய வருக்கும்
நம்பாமற் பேச்சுரைக்கு நரகிக் கிடாய்
வாக்கிலோர் பரத்தையரை யுரைத்த நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

70

பணந்தானே பறிக்கின்ற பரத்தை மாரை
பலநாளி லுயிர்பறிக்கும் வேசி மார் காண
குணந்தானே யிரக்கமாய் வணங்கி பேசும்
குணமெல்லாங் குடிகெடுக்குங் கொள்கை தானே
தினந்தானே பரத்தையரை சேர்ந்தான் மெத்த
தீங்குவருஞ் செய்தொழில் போல்திருடராவாய்
வணங்காத புறமெரித்து விடைமீ தேறும்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

71

சூதுவினை சதிபாவ மெத்த வுண்டு
சொல்லவினி முடியாது பரத்தை மார்க்கு
வந்துகளுங் படுகளுவி மயக்க சொல்லும்
வல்லிடியு மெத்தவுண்டு பரத்தை மாறுக்
கேதுசற்று நீதியில்லை நிலைமை யில்லை
எச்சலில்லை வெட்கமில்லை பரத்தை மார்க்கு
மாதுமைளொ ருபாதியே எம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
72

மெழுகோடே கோழிமுட்டை கலந்து கூட்டி
மினிக்கி முகமுலைக்கு நல்ல மஞ்சள் பூசி
கழுகோடே யிருக்குமந்தப் புண்மென் றாலும்
கையிலே பொருள் கொடுத்தால் கலந்து போகும்
வழுவாதே செய்யுமந்தப் பரத்தை மாரை
வருந்தியேபொ ருள்கொடுத்து மாய வேண்டார்
மழுவேந்து ங்கையாணை யெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
73

தேவடியா ளொருத்தி யவளனே கம்போக்குத்
தினந்தினமும் பெண்டெனவே சேர்ந்து கூடி
நாவடியி லிருக்குமந்த உதட்டிலே
நல்லமிர்த மிருக்குமென்று நாய்போல் பற்றி
சோகைவாடி வாகியே பிணிநோய் கொண்டு
கொல்லுலகிற்றே ஷிகளாய்த் திரிய வேண்டா
மாவடியி லிருக்குமந்த யெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
74

மோரிருக்கச் சாராயந் தேடி வாழை
முதலிருக்க வெட்டியினீர் மொண்டு வார்த்து
ஊரிருக்குப் பரைச்சேரி தேடி நல்ல
உடைக்காடை யிருக்கும்ர வுரியைப் போர்த்து
சீரிருக்கு மனையாட்டி யிருக்கு மாயத்
தெரிவையர்க் குதேடிநொந்து திகைக்க வேண்டா
மாரிருக்குந் திருமாலு மயனுங் காணா
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
75

கழுகோடிப் பாக்குமாத்த நீரி லேதான்
களையாற்ற வேண்டுமென்று கருது மாபோல்
அவைபோல நின்றெயுங் கான லுக்குங
அள்ளிநீர் குடித்துழலை யடங்கு 'மாபோல்
விழவான பேச்சுடைய வேசி யராசை
மெய்யென்று நம்பிநீர் மெலிய வேண்டாம்
மழுவோரு கைமானோருகை வைத்துள் ளானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
76

கற்ற.... சூதுகப்படுதானே
கள்ளமயல் பொருந்தி நிற்குங் கபட்டகே
யெத்தனைதா னுபகாரம் பண்ணி னாலும்
மனப்போது மனதுதய வில்லா தார்கண்
செத்தபின மானாலும் பொருளைக் கண்டால்
சிக்கெனவே தழுவி மெல்லச் செய்வார் போக
மத்தகச முகத்தானை யளித்தூர் வினை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
77

கடிதான விஷப்பாம்பு கடித்தால் பலபேர்
கடுகியே மந்திரத்தார் கழிக்க லாகும்
கொடிதான துர்ச்சனர்தம் விஷமென் றாலும்
கொஞ்சம்தர் மப்பிறப்புக் குள்ளே தீரும்
இடுவாயில் பரத்தையர் தம் விஷமே யென்றால்
எழுபிறப்பு மீளாதங் கவரை நீங்கி
வடுவான கன்னியிட பாகத் தானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

78

கோடிசெம் பொன்கொடுத் தாலுமான் சேனை
குதிரைகளை கொடுத்தாலும் குறைவே யென்று
வேடர்பரி பொற்பறிக்கும் வேசிய ராசை
மெய்யென்று நம்பியே மெலிந்து சேர்ந்து
தேடியளித் தேநிதிக ளெல்லாம் தோற்று
திருடராய் புவிமீதிற் றிகைத்து மெத்த
வாடிமுகஞ் சேர்ந்திருந்து மயங்க வேண்டாம்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

79

கொண்டாடி மேல்விழுந்து நயங்கள் பேசிக்
கூசாமல் சேர்ந்துநிதி கொடுவர் யென்று
திண்டாடித் தெருவாசல் முன்னே விட்டு
திருடனென்று கலமுதுகிற் சுமக்க வைத்துப்
பெண்டாட்டி வில்லென்று பெற்ற தாயைப்
பிள்ளைகளை வில்லென்று பெருகப் பேசி
வண்டாட்டம் பேசுபரத் தையரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

80

<u>கண்ணாலே</u> வரவழைத்துக் கொண்டு சென்று
கட்டின்மெத் தைமீதிற் வைத்து கண்கை காட்டி
பண்டொரு நாள் வந்தீ ரென்று தவதாகப்
பசப்பியே பாசாண வுண்டை பாய்ச்சி
உண்டான பொருளையெல்லாங் கைக்குப் பற்றி
உபயத்தாற் குரங்காக்கி யோட காண
வண்டாறுங் குழலுமையாள் பாகத் தானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
81

உடனாக்க கட்டுநிதியுள்ள உனைப் போதில்
உனைப்பிரிந்தாலி யாள்சாவே றுண்மை யென்பாள்
இடும்போது சோற்றிலே நானுங் கூடி
குருந்துண்டா லோழிய வேன் கிரங்கா தென்பாள்
கொடுபொரு ளுமாண்டோற்போ போபோ வென்று
குட்டுவாள் நாய்போலே குரைப்ப ளந்த
மடவார்கள் மாயையினி விட்டு நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
82

சாதிகுல முறையில்லை தயவோ வில்லை,
சதிபாவம் கற்பனைகள் சால வுண்டு
நீதியில்லை குற்றமில்லை நினைக்கும் போது
நினைவெல்லாங் குடிகெடுக்கும் நினவே கண்டீர்
பாதியுல களித்தாலு மென்ன தந்தீர்
பத்தாதென் றேயுரைக்கும் பரத்தை மார்கள்
வாதனையிற் றிருந்துழன்று மயங்க வேண்டா
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
83

பேச்சென்றா லமிர்தமா பேசு வார்கள்
பேய்மடவாராசை கொண்டாற் பொருளக ளெல்லாம்
ஆச்சென்றொல் கத்தினை விடப்பாலோட்டி
அதற்கேற்ற பேர்களைக் கொண்டடித்துத் தள்ளிப்
பூச்செண்டா லேரியுமந்தக்கை களாலே
பெருங்கல்லை விட்டெறிவார் பொதுவின் மாதர்
மாச்சிந்த புகழுடைய மெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

84

சிங்கார மாகமுக மினிக்கி நல்ல
திலகமிட்டுக் காமுகரைத் தேடி மெல்ல
பொங்கார மாயமுது உடல்மேல் வீழ்ந்தும்
பிரிந்திருப்ப தில்லையென்பார் பிழையே யென்பார்
எங்காகிற போகுமது தகுமோ வென்பார்
இப்படியே பொருள்பறிப்பா ரிணக்கும் நீங்கி
மங்காத வாழ்வளிக்கு மெம்பி ரானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

85

ஈயாமல் தென்போலப் பொருளைச் சேர்த்தே
எவர்வந்து கேட்டாலு மில்லை யென்று
தாயாரைக் குருவாகப் புத்தி கேட்கும்
சாராய வாய்ச் சியர்க்குத் தானே யீந்து
பேயானவடி வாகிப் பித்த னாகிப்
பெண்டீர்க்கும் பெற்றவர்க்கும் பேத னாகி
மாயாமல் விலைமாதர் மயல நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

86

எதுக்கேயி ருவருமாய்க் கூடி வாழ
என்பாக்கிய மோமல்நோ னோமுது மாறே
பாதகமே செய்திருக்கும் பாவி யேற்கும்
பலன்வந்து கிடைத்ததென்று பசப்பு மாயக்
கோதையருக் கிணங்கியே குணந்தான் கெட்டுக்
கோல்குடுவை கையேந்திக் கொடுநோய் கொண்டு
வாதமிது வென்றோருக் கால்தாங் கிடாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

87

சாலவெகு பொருளுடையார் வீட்டில் வந்தால்
தனித்துவந் தேதுசற்றுத் தயவு தானே
மாலயெனந் தீயானுங் கூடித் தேடி
வகுத்தபடி வந்தீரோம் தன்போ லென்று
காலவிட மடவார்சொல் கருதிற் சேர்ந்து
கைப்பொருளுந் தோற்றுலகீர் கள்ள னாகி
வாலவயதி ழந்துமதி மயங்கி டாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

88

வேதியர்கள் குருமார்கள் வீட்டில் வந்தால்
வீணர்கள் வந்தாரென்று வெகுண்டு பேசி
ஞாதியர்கள் நாவலர்கள் நாடி வந்தால்
ஞமன்போல்வந் தாரென்று நழுவி யோடி
வீதியிலே விலைமாதர் கரும மென்று
வேண்டியதோர் பொருள்கொடுத்து வீணராகி
வாதனையும் பலநோயுங் கொண்டி டாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

89

இப்பிறப்பெல் லாதேடியிருந் திருநா ளாயென்
மனதுக் கேற்றவர் நீரின்று வந்தீர்
எப்பிறப்பிற் காண்பதும்மை பிரிந்தா லென்றே
யிலை பிளவி லிடும்மருந்தா இரக்க மாக
கைப்பொருளெல் லாம்பிரித்துக் கடிக்க வோட்டும்
கள்ளமயல மடவார்சொல் கருதி டாமல்
வைப்பதுவே முடிமீதில் மதியா னுரை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

90

பார்த்தாலும் பசுப்போல இருப்பார் சற்றே
பாய்ந்தாலும் பெரும்புலிகள் போலே பாய்வார்
கூத்தாடிய பிரியமுங் காட்டிக் கொங்கைக்
குடங்காட்டிப் பொருள்பறிக்கும் பரத்தை மார்கள்
நீர்த்தாரைக் கிச்சைகொடு திரிந்தே நாளும்
நினைவழிந்து மதிமயங்கி நிலைமை மாறி
மாற்றானுக் கிறுத்தகுடி யாயி றாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

91

இல்லாளுங் குலையதாய் தந்தை மாறு
மேல்லோறுக் குலையமய லின்ப மாகக்
கொல்லாமல் மருந்தை யிட்டுப் பொருளை
கோதையர்கள் சொற்கெட்டுக் குடிதான் கெட்டுப்
பொல்லாரென் றுடம்புபடுத்துப் பொருளுந் தொற்றுப்
பெருமரத்தி லுப்பிடித்து படுபலம் போகும் போல்
வல்லாண்மை குலைந்துமதி மயங்கி டாமல்
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே

92

சுத்தவிஷ மடவராசைச் சேர்ந்து வாழ்ந்து
சோகைவடி வாகிமெத்த துரும்ப ராகிப்
பெற்றவர்க்கும் பகையாகிப் பிறந்த போக்கும்
பெரும்பழியாய் பழையபொருள் பெற்று போற்றிட
இத்தனையும் படுவதெல்லால் நரகுக் கீடா
மேற்பொழுதும் பரத்தைய ரோடாமல் டிணங்கி
மத்தகத்தை யுரித்துமேற் போர்த்துள் ளானை
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
93

வெற்றிலைப் பாய்த்திரிந்து ழன்று வெகுனாள்
வீணாய்வே சியர்மருந்தாலே மிகப்பேய்க் கொண்டு
முற்றத்தே வந்து நின்ற லார லேறி
முகம்பார்த்துப் புலர்ந்துபெரு மூச்சு விட்டு
சித்தத்தே நினைந்துருகி மயங்கி வாடித்
தெரிவையர்க்கே பொருள்கொடுத்து
திகைக்க வேண்டாம்
வைத்தசடை மீதிலந்தி மதியி ளைஞ்னே
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
94

பரிக்கும் வகை யிளைஞேரைப் பரத்தை மார்கள்
பச்சிலையைப் புழுவரிக்கும் பண்பு போல்
கரிக்கடுகு மிளகுமில்லை புளியு மில்லை
கைக்குமொ ருகாசில்லை கடனுந் தாரார்
சிரிக்கிகட்குப் புடவையில்லை யென்று மெல்லத்
தெட்டிவெகு பொருள்பறிக்குந் தெரிவை மாரை
மறுத்துலகெ லாம்போற்று மெம்பி ரானை
மறைகாட்டி லம்மானை வணங்கு வீரே
95

நெட்டிவெகு பொருள்பறிக்குந் தெரிவை மாரைச்
    செருக்குடனே சேர்ந்திருந்த சிலநாள் தண்ணில்
ஒட்டியபுண் பிரமியங்க பால சூலை
    யுஷ்ணமும் பலவாழ்வு மொன்றாய்க் கொண்டு
கெட்டுமிகவு டல்தளர்ந்தே யிரைப்ப னாகிக்
    கெடுநரகுக் கீடாக்கா கிடந்தி டாமல்
மட்டுடநல் விலைமாதர் மயலை நீங்கி
    மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
96

சத்தியம்பொய் கொலைகளவு அஞ்சிச் சற்றுஞ்
    சலியாத பரத்தையரைச் சறுவிச் சார்ந்தால்
எத்திசையும் பறந்துழன்று நரகுக் கீடா
    எல்லர்க்கும் பொல்லாரா யிருந்து வாழ்வார்
பத்தியுடம் சிவன்றுள சேர் பெரியோர் தங்கள்
    பதமலரைச் தினந்நினைந்தால் பரக திக்கே
வைத்திடுவார் விலைமாதர் மயலை நீங்கி
    மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
97

முன்னொரு நாள்நீர்வந் துபொன் நாளாய்
    முடிகோதி யெண்ணையிட்டாள் முகமுஞ்
                                        சேர்ந்தாள்
பின்னொரு வர்வந்தாலுந் திரும்பிப் பாராள்
    பேசாமலி ருக்கின்றாள் பிணக்குங் காணேன்
என்னமய லுன்மீதிற் கொண்டா ளென்றே
    இப்படிபொய்சொல் லுங்கிழவிக் கிணங்கி டாமல்
மன்னவரு மலரேனு மாலும் போற்றும்
    மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
98

கைதனிற்பொ ருள்மிகவே தந்த பேர்கள்
 கழித்துவிட்டுப் போகும்வகை கண்டால் மெத்தை
பொய்யழுகை யமுதுசற்றே யுடல்மேல் வீழ்ந்து
 பொண்ணாசை கொண்டவள்போல்
 புலம்பி னைந்து
செய்தகுற்ற மேதுக்குச் சொல்வீ ரென்று
 தேசிவையரைச் சேர்ந்தவமே திருட ராகி
வையகத்து ளீன்றாய மயங்க வேண்டாம்
 மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
99

பெற்றதாய்க் கழுத்தணிந்த நகையா னாலும்
 பெண்டாட்டி தனக்கிட்ட நகையா னாலும்
உற்றதவத்தோ றுகுழந்தை பணியா னாலும்
 உடுத்துவைத்த பழம்புடவை யேஆ னாலும்
தெற்றெனவே கவர்ந்துபொய் பரத்தைக் கீந்து
 சிக்கெனதாய் தந்தையரைத் தெருவே கண்டால்
வற்றனமரம் போனின்று மயங்கி டாமல்
 மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே
100

## மகுடப் பாடல்

பகரபழம் புண்ணாளி பரிகாரி யென்றும்
பழமொழிபோற் பரத்தையரா சையிற்றாற் கண்ட
சுகம்போது மென்றுமனத் துயரங்கொண்டு
சோர்மதன சிகாமணிகூற் றாகு மிந்த
தகவில்ப ரத்தையர்மா லைகேட்போ ரெல்லாஞ்
சாலமிகச்செய் யும்பரத்தை மாரை நீங்கி
மகிமைபெரு மறைக்காட்டி ம்மானை வாழ்த்தி
மனையறம்வா ழாதினிது வாழ்ந்து வாரே

### பரத்தையர் மாலை நூலின் அடிக்குறிப்பு

நளஞு மாசிம் யகூம் தேதி மறைக் காட்டம்மாளை யென்னும் பரத்தையர்மலை யென்னும் சொல்லப்பட்டது. பட்டீசுரா பச்சை நாயகி இருபாகடாச் சத்தி நாற்--- முகிந்தது முற்றும். தண்டியுதபாணி கணைசெய்யலும்.

******

பின்னிணைப்பு - 1

# பரத்தையர் மாலை

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி

(எண் - பாடல் எண்)



| செய்யுள் தொடக்கம் | | எண் |
|---|---|---|
| அங்காடிச் சுரைக்காய் | - | 52 |
| அரைப்பணத்தை | - | 48 |
| ஆகமங்களிலிருக்க | - | 68 |
| ஆடிக்குச் சேலையைந்து | - | 22 |
| ஆசையென் றாலுன்மீதிற் | - | 51 |
| இந்திரனே யானாலுங் | - | 24 |
| இப்பிறப்பெல்லா தேடி | - | 90 |
| இல்லாளுங் குலையதாய் | - | 92 |
| ஈயாமல் தென்போல | - | 86 |
| உடனாக்க | - | 82 |
| ஊர்க்கு நீர்போன | - | 35 |
| எட்டியிலே கட்டு மரம் | - | 30 |
| எத்தினிநாள் | - | 8 |
| எதுக்கே யிருவாமாய் | - | 87 |
| எலியோடிப் பொறி | - | 69 |

| | | |
|---|---|---|
| ஒருத்தியெக் கெதிரான | - | 29 |
| ஒருபொழுதும் | - | 7 |
| ஒருவனை உன்மடியின் | - | 33 |
| கடங்காரர் எண்பதுபொன் | - | 6 |
| கடிதான விஷப்பாம்பு | - | 78 |
| கடைக்கிழவி தன் வீட்டில் | - | 42 |
| கண்ணாலே | - | 81 |
| கருதரிய கனியிருக்கச் | - | 12 |
| கழுகோடிப் பாக்கு | - | 76 |
| கற்ற........ | - | 77 |
| காட்டுக்கே யெரித்த | - | 14 |
| காலுக்கு காலாழி | - | 20 |
| கானலே நீரென்று | - | 67 |
| குரங்காசணத்தை | - | 46 |
| கூத்தியர்கள் கபடத்தை | - | 17 |
| சேலையென்பார் பணமென்பார் | - | 32 |
| கொலைக்கிழவி | - | 43 |
| கோடிசெம்பொன் | - | 79 |
| கொண்டாடி மேல் விழுந்து | - | 80 |
| கைதனிற் பொருள் | - | 99 |
| கைப்பொருளெல்லாம் | - | 3 |
| சத்தியம் பொய் | - | 97 |

| | | |
|---|---|---|
| சாதிகுல முறையில்லை | - | 83 |
| சாலவெகு பொருளுடையார் | - | 87 |
| சிங்கார மாகமுக | - | 85 |
| சிலபேரை மெத்தையின் | - | 34 |
| சினக்கிழவி கண்கெட்ட | - | 44 |
| சீர்கொண்ட | - | 1 |
| சீர்பெறு புவியில் | - | காப்பு |
| சுத்தவிஷ மடவராசை | - | 93 |
| சூதுவினை சதிபாவ | - | 72 |
| செய்யாதவஞ்சனைகள் | - | 63 |
| தாய்சவிக்க வேசியர்க்கு | - | 9 |
| தெருவிலே புறப்படுவாள் | - | 18 |
| தெள்ளமுத மிருக்க | - | 13 |
| தேளுக்கு விஷங்கொடுக் | - | 4 |
| தேவடியா ளொருத்தி | - | 74 |
| நரம்புடனே | - | 50 |
| நழுவுவாரென் றிருந்து | - | 58 |
| நாய்கடுகு சிறுபுனை | - | 40 |
| நாய்தலையின் மூளைகுழி | - | 47 |
| நாய்பிடுங்கும் முலையை | - | 39 |
| நாடிவருமிரவலர் | - | 26 |
| நானிருக்க | - | 60 |

நிலத்திலே யேரிபாலை - 65
நினைவ தெல்லாங் - 59
நெட்டிவெகு பொருள் - 96
நெருப்பிலே குளிர்ந்த - 16
பகரபழம் புண்ணாளி - மகுடம்
பச்சைப் பாம்புலர்த்தி - 38
படியென்பார் படியளந்து - 62
படும்பட்டார் முலைமாதர் - 66
பணந்தானே குணங்கல்வி - 53
பணந்தானே பறிக்கின்ற - 71
பணத்தினால் வசமாக்கப் - 56
பரத்தையர் தங்கபடறிந்து - 57
பரத்தையரே அறியாமற் - 54
பரத்தைய ரோடிணங்கிற்ற - 36
பிரிக்கும் வகையிளைஞேரை - 95
பாக்கிலே மருந்தையிடும் - 70
பாம்புக்கு பால்வாத்து - 5
பாய்க்கிழவி மெனக்கிடக்கும் - 41
பார்த்தாலும் பசுப்போல - 92
பாராய மஞ்சள் - 55
பாவலர்க்கே கொடுத்தறியார் - 45
பாவிகளை - 27

| | | |
|---|---|---|
| பிணங்கண்டால் கழுகுஓடிச் | - | 19 |
| பூமாலை மணிமாலை | - | 2 |
| பெண்டாட்டி பகையாவாள் | - | 10 |
| பெற்றதாய்க் கழுத்தணிந்த | - | 100 |
| பேச்சென்றாலமிர்தமா | - | 84 |
| பேதை முதலேழு | - | காப்பு |
| பொய்சொல்லி | - | காப்பு |
| மாமியார் படிப்பதெல்லாம் | - | 64 |
| மாமியார் பரத்தையர் | - | 61 |
| மாமியார் பிடித்தவரை | - | 37 |
| முலைகாட்டி முலையில் | - | 31 |
| முன்னொரு நாள் | - | 98 |
| முன்னொருவன் | - | 15 |
| மூக்கிலே | - | 28 |
| மெழுகோடே கோழிமுட்டை | - | 73 |
| மோரிருக்கச் சாராயம் | - | 75 |
| வெற்றிலைப் பாய்திரிந்து | - | 94 |
| வேசியர்க்கு நெஞ்சிரக்கஞ் | - | 21 |
| வேசியுடனே திரிந்து | - | 49 |
| வேண்டிய பொன் | - | 23 |
| வேதியர்கள் குருமார்கள் | - | 89 |
| வீட்டிலே | - | 25 |
| வீரவாளிப் பட்டுபொன் | - | 11 |

## பின்னிணைப்பு - 2

# அருஞ்சொற்பொருள்

**(எண் : பாட்டு எண்)**

| | | |
|---|---|---|
| அங்காடி | - | கடைவீதி (52) |
| அல்குல் | - | பெண்குறி (31) |
| அன்னம் | - | அன்னப்பறவை |
| ஆதிபரன் | - | கடவுள் (காப்பு) |
| கச்சு | - | முலைக்கலசு (38) |
| கபடம் | - | தந்திரம், வஞ்சகம் (17, 16) |
| கடிகை | - | நாழிகை (4) |
| கடுகி | - | சுண்டைக் செடி (74) |
| குழலுமையாள் | - | பார்வதி (77) |
| குரம்பை | - | உடல் (46) |
| கொங்கை | - | முலை |
| கோல், குடுவை | - | பிச்சைப் பாத்திரம் |
| கோதையர் | - | பெண் |
| சருவுவார் | - | லீலை பாராட்டுவோர் (18) |
| சாரிமேகப் பட்டு | - | பரத உறுப்பு ஒன்று (11) |
| சூரை | - | கொள்ளை (58) |
| சூலை | - | நோய் (96) |

| | | |
|---|---|---|
| செப்பறிய | - | மார்பு (3) |
| ஞமன் | - | யமன் (89) |
| ஞாதியர்கள் | - | சுற்றத்தார் (89) |
| தாரணி | - | உலகம் (காப்பு) |
| துர்ச்சனர் | - | மோகலீலையுடையவர் (78) |
| தெருவைமார் | - | வேசியர் (45) |
| நாவலர் | - | கற்றவர், புலவர் (27, 45) |
| நூதம்பத்தார் | - | அழகிய அல்குல் உடையவர் (46) |
| பசப்புவார் | - | ஏமாற்றுபவர் (7) |
| பச்சையோந்தி | - | தான் இருக்கும் இடத்திற்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் இயல் புடைய ஓர் உயிரினம் (38) |
| பாவலர் | - | கவிகள், புலவர் (45) |
| மடவார் | - | அறிவீனர், பெண்கள் (86) |
| மாதுமை | - | திரிகோண மலைக்கோயில் தேவி (பார்வதி) |
| ஹரணி | - | வேசை, வசி (காப்பு) |
| வீம்பர் | - | வீணானவர் (49) |
| வீரவாளி | - | ஒரு புடவை (11) |

## பின்னிணைப்பு - 3

# சுவடியமைப்பு

| | | |
|---|---|---|
| சிற்றிலக்கிய நூல் | : | பரத்தையர் மாலை |
| ஆசிரியர் | : | மதனசிகாமணி |
| சுவடியின் பதிவு எண்கள் | : | 4355R முழுமையாக இல்லை<br>2586R முழுமையுடையது |
| சுவடியின் தன்மை | : | ஓலைச்சுவடி |

## ஓலைச்சுவடியின் அளவுகள்

| | | |
|---|---|---|
| நீளம் | : | 34.5 செ.மீ |
| அகலம் | : | 2.8 செ.மீ |
| சுவடியில் துளை | : | வலது புறத்திலிருந்தும், இடது புறத்திலிருந்தும் 15 செ.மீ. இடைவெளியில் இரு துளை |
| சுவடியில் வரிகள் | : | ஒரு பக்கத்திற்கு 8 அடிகள் கொண்டது |
| சுவடியின் தொகுப்பு | : | சிற்றிலக்கிய அறநூல் தொகுப்புகளில் ஒன்று |
| சுவடியின் எண்ணிக்கை | : | 1. 23 சுவடிகள்<br>2. 53 சுவடிகள் (லங்கை எண் கையெழுத்து பிரதி) |

சுவடியின் அடிக்குறிப்பு பின்னிணைப்பில் உள்ளது.

## பின்னிணைப்பு - 4

# சுவடியில் எழுத்து மாற்றங்கள்

(பா.எ. - பாடல் எண்)

(சு.எ. - சுவடிஎண்)

**ந-ன**

நகரம் னகரமாக மாற்றமடைதல் (சு.எ. 20)

தகப்பாநாறும் - தகப்பனாரும் (சு.எ. 18)

உடநாக்க - உடனாக்க (சு.எ. 19)

பித்தநாகி - பித்தனாகி (சு.எ. 19)

**ள-ழ**

ளகரம் ழகரமாக மாற்றமடைதல்

வாள்த்தி- வாழ்த்தி (சு.எ. 22)

குளந்தை -குழந்தை

தலையெளுத்து- தலையெழுத்து (சு.எ. 11)

**ர-ற**

ரகரம் றகரமாக மாற்றமடைதல்

நிரைந்த - நிறைந்த (பா.எ. 17)

தெறுவிலே - தெருவிலே (பா.எ. 18)

உறுவிலே - உருவிலே (பா.எ. 18)

வாய்திரந்து - வாய்திறந்து (பா.எ. 10)

பொறுள் - பொருள்

திருறும்பி பாராள் - திரும்பி பாராள்

வேரில்லை - வேறில்லை

கறுப்பு - கருப்பு

ள – ற

ளகரம் றகரமாக மாற்றமடைதல்

வெள்ளிலை- வெற்றிலை (பா.எ. 13)

ள – ல

ளகரம் லகரமாக மாற்றமடைதல்

மெள்ள மெள்ள - மெல்ல மெல்ல

******

# துணை நூற்பட்டியல்


1. ஆசிரியர்குழு - சுவடிப்பதிப்புத்திறன் (தொகுதி 1) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113. பதிப்பு 2002.

2. டாக்டர் உ.வே.சா. - மாலை ஐந்து, டாக்டர் உ.வே. சா. நூலகம், பெசன்ட் நகர், சென்னை - 600 090. ஆண்டு 1995.

3. ந.வீ. செயராமன் - சிற்றிலக்கிய புலவர் அகராதி நறுமலர்ப் பதிப்பக வெளியீடு, நவம்பர் 1983.

4. கு. சுந்தரமூர்த்தி - தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி 2) நச்சினார்க்கினியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.

5. தமிழ்ச் சுவடி - சென்னைப் பல்கலைக்கழகம், அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகம், சென்னை - 5.

6. ராஜ் கௌதமன் - அறம் / அதிகாரம் நூல்

7. புலியூர் கேசிகன் - திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 600 108.

8. ந. கதிர்வேற் பிள்ளை தமிழ் மொழி அகராதி

9. S. Kuppu Swami Sastri - An Alphabetical Index of Tamil Manuscripts in the Government Oriental manaucripts Library, Madras, 1932.


10. R. Baskaran - An Alphabetial Index of Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, 1980.


***********

(1) T.R. 1418

சுவடி எண் : 4355 R







52

(2)

சுவடி எண் : 2586R

23

22

21